<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 251/2019 | சாட்சியம் | : | **WW3** |
| **Name** | : | திரு.ஆனந்த் ராஜ் | | | |
| **Date** | : | **06.01.2025** | | | |
| **Time** | : | **12.54 P.m to 1.31 P.m** | | | |

<u>தொ.த.சா.**3.**திரு.ஆனந்த் ராஜ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

**(**நிர்வாகம் தரப்பில் தாக்கல் செய்யப்பட இருக்கும் ஆவணங்கள் சாட்சி இடம் ஒப்படைக்கப்பட்டு படித்து பார்க்க அவகாசம் வழங்கப்பட்டு அதன் பின்னர் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**)**

என்னிடம் காட்டப்படும் Production Shift Loss Time Analysis Report ல் முதல் பக்கத்தில் உள்ள M.Anand Raj என்ற பெயர் என்னுடையது தான். இரண்டாவது பக்கத்தில் Cell incharge என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள என் கையொப்பமும் என்னிடம் காட்டப்பட்ட மேற்படி ஆவணத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் என சொல்லப்படுவதும் ஒன்றுபோல் தான் உள்ளது என்றால் இல்லை. இந்த ஆவணங்கள் கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு அனுப்பப்படும் போது உண்மை தன்மை தெரியவரும் என்றால் ஆமாம். நான் அசம்பிளி பிரிவில் வேலை பார்த்தபோது டீம் லீடர் லா புக் இருந்தது என்றால் ஆமாம். அது என்னிடம்

காட்டப்படும் படிவம் போன்று தான் இருந்தது என்றால் ஆமாம். Cell incharge team leader log book ல் இரண்டாவதாக உள்ளது என்னுடைய பெயரா என்றால் அது போன்று தான் உள்ளது. நான் சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்னர் எவ்வாறு கையெழுத்து போட்டேனோ அதேபோன்றுதான் இப்பொழுதும் போட்டு வருகிறேன் என்றால் ஆமாம். (நிர்வாக தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் ஒரு வெள்ளை தாளில் சாட்சியின் கையொப்பத்தை போட சொன்னதன் பெயரில் சாட்சி கையொப்பம் (மூன்று எண்ணிக்கை) போட்டுக் கொடுத்தார்.) Anandharaj.M@gknautomotive.com என்ற மெயில் ஐடி என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் மெயில் நான் அனுப்பினேனா என்றால் நினைவில்லை. 26.03.2019 அன்று நான் ஒரு மெயில் அனுப்பி உள்ளேன் என்றால் எங்கள் பெயரில் மெயிலை சூப்பர்வைசர் தான் அனுப்புவார். சூப்பர்வைசர் எங்களிடம் உங்கள் இ-மெயில் ஐடியில் இருந்து அனுப்பினால்தான் சீக்கிரம் வேலை நடைபெறும் என்று சொல்லி எங்கள் ஈ-மெயில் ஐடியில் இருந்து அனுப்புவார். எங்கள் ஈமெயில் ஐடியை பயன்படுத்தக் கூடாது என வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஆட்சேபனை எதுவும் நிர்வாகத்திடம் தெரிவிக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னர் நிர்வாகம் எங்கள் ஈ-மெயில் ஐடியை பயன்படுத்தி மெயில் அனுப்புவார்கள் மற்றும் அவர்கள் பராமரித்து வரும் Log book ல் எங்களுடைய கையொப்பத்தை அவர்களே போட்டுக் கொள்வார்கள் என தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. FPPO Inspection Report என்றால் என்ன என்றால் உதிரி பாகங்களின் ஆய்வு செய்து அது சம்பந்தமாக எழுதும் அறிக்கையாகும். என்னிடம் காட்டப்படும் FPPO Inspection Report ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த நான்கு வருடங்களாக குவாலிட்டி பிரிவில் தான் நான்

வேலை பார்த்து வருகிறேன். அந்த அறிக்கையும் நான் தான் கொடுத்துள்ளேன். அது நி.சா.ஆ.3. வரிசை (3 எண்ணிக்கை). நான் அசம்பிலி பிரிவில் வேலை பார்த்த போது நான் தான் Production report, Breakdown report, Shift Scheduling, ஆகியவற்றை Value Stream Leader க்கு ஈ- மெயில் மூலம் அனுப்புவேன் என்றால் இல்லை. டீம் லீடருக்கு வீட்டு வாடகை படி கொடுப்பார்கள் என்றால் ஆமாம். ஆப்பரேட்டர்களுக்கு DA கொடுப்பார்கள் என்றால் தெரியாது. தற்போது எனக்கு DA கொடுக்கப்படுவது இல்லை. டீம் லீடர் ஆன பிறகு DA கொடுக்கவில்லை என்றால் இல்லை ஒரு வருடம் வரை கொண்டிருந்தார்கள் அதன் பின்னர் தான் கொடுப்பதை நிறுத்தினார்கள். ஆப்பரேட்டர்களுக்கு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை என்றால் தெரியாது. எனக்கு எச்.ஆர்.ஏ வழங்கப்படும் காரணத்தினால் தான் DA வழங்கப்படுவது இல்லை என்றால் சரியல்ல. இரண்டும் தான் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். Skill Matrix Evaluation Test டீம் லீடர்களுக்கு உள்ளது என்றால் அனைத்து ஆபரேட்டர்களுக்கும் டீம் லீடர்களுக்கும் உள்ளது. எங்களின் திறனை ஆய்வு செய்வதற்கு தான் மேற்படி டெஸ்ட் வைக்கப்படும் என்றால் ஆமாம். Competency Test, டீம் லீடர்களுக்கு மட்டும்தான் செய்யப்படும் என்றால் இல்லை. நான் தற்சமயம் இருப்பது Standard Room, Gauge Room என்றால் ஆமாம். உற்பத்தி செய்த பொருட்கள் தான் Standard Room க்கு ஆய்விற்கு வரும் என்றால் ஆமாம். ஒவ்வொரு உற்பத்தி ஏரியாவிலும் டெஸ்ட் செய்வதற்கு என்று Gauge Room இருக்கும் என்றால் ஆமாம். Standard Room ல் Coordinate Measuring Machine என்ற சிறப்புமிக்க பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றால் ஆமாம். Standard Room ல் ஜோதிவேல் தான் VSM என்றால் ஆமாம்.

டீம் லீடராக இருந்து தான் VSM ஆக முடியும் என்றால் தெரியாது. ஆரம்பத்தில் அசம்பிளி பிரிவில் தனித்துவம் வாய்ந்த பணி செய்து வந்தேன் என்றாலும் தற்போது உற்பத்தி பிரிவில் கண்டறிய முடியாத குறைபாடுகளை Standard Room பிரிவில் நான் மற்றும் ஜோதிவேல் ஆய்வு செய்து அறிக்கை வழங்கும் தனித்துவம் வாய்ந்த பணி என்பதால் நான் தொழிலாளர் என்ற வரையறைக்குள் வர வழிவகை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA

Presiding Officer,
Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.01.18 18:12:51 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.01.2025